ஆலைகளில் வேலை நிறுத்தம் கதவடைப்பு பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த மன்றத்தில் கொண்டு வரக்கூடாது என்று முன்பு கொடுத்திருக்கும் தீர்ப்புகளுக்கு ஒப்ப, இந்த தீர்மானத் திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) பல்லடம் ஸ்ரீ இலட்சுமிநாராயண மில் கதவடைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப் பினர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

"அண்மையில் பல்லடம் ஸ்ரீ இலட்சுமிநாராயண மில்ஸ் மானேஜிங் ஏஜண்ட் திடீர் என்று மில்லை மூடிவிட்டதால், 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்பங்கள் பட்டினியால் வாடவேண்டிய அபாய நிலையில் உள்ளார்கள். இதனால் அப்பகுதி மக்கள் பீதி அடையும் நிலைமையைப் போக்கவும், பாதுகாக்கவும் அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்த இப்பிரச்சினையை சபை விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒரு மணி நேரம் ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அவையில் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்பதற்கொப்ப, அப்படிப்பட்ட விஷயங்களுக்கு இந்த அவை யைப் பயன்படுத்தக்கூடாது என்கிற தீர்ப்புகளுக்கு ஏற்ப, இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) பம்பாய் மாநகரில் சிவசேனையினரால் தமிழர் நலன் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே, திரு. இராமமூர்த்தி, திரு. கோதண்டராமன், இவர்கள் ஒரு பொருள் பற்றி ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள்,

"The business of the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., the need to urge the Central Government to give adequate protection to South Indians in Maharashtra State against the Siva Sena menace which has recently taken a heavy toll of human lives in the City of Bombay."

என்றும், திரு. க. இராமமூர்த்தி அவர்கள்,

"That this House shall stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz., the disturbances by the people of the 'Siva Sena' movement in the City of Bombay which was aimed to result in monetary loss to the people of Tamil origin in the City of Bombay and also to result in insecurity to their lives and residence."

என்றும், திரு. கோதண்டராமன் அவர்கள்,

"சிவ சேனையினர் தாக்குதலுக்குத் தமிழர்கள் ஆளாகிப் பலர் மாண்டு மடிந்துள்ளதால், இது விஷயமாக விவாதிக்க